### சட்டப்பேரவைத் தேர்தல்! “நமது மக்கள் முன்னேற்றக் கழகம்”

## பிஎல்ஏ ஜெகநாத் மிஸ்ரா - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து ஆதரவு!

**அமைச்சர் கே.என்.நேரு – ஆர்.எஸ்.பாரதி – தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. உடனிருந்தனர்!**



சென்னை, டிச. 24-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை ‘நமது மக்கள் முன்னேற்றக் கழகம்” கட்சியின் நிறுவனத்தலைவர் பிஎல்ஏ. ஜெகநாத் மிஸ்ரா மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து தி.மு. கழகத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (23-12-2025) காலை, நமது மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பிஎல்ஏ. ஜெகநாத்மிஸ்ரா மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில், தி.மு.கழகத்திற்கும் - அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் ஆதரவு தெரிவித்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், எம்.பி., ஆகியோர் உடனிருந்தனர்.

### புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட – சென்னை, அண்ணாநகர்

## ‘டவர்ஸ் கிளப்’ நிர்வாகிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் நேரில் சந்திப்பு!

**புரசை ரங்கநாதன் தலைமையில் – வாழ்த்துப் பெற்றனர்!**



சென்னை, டிச. 24–

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை, ”அண்ணா நகர் டவர்ஸ் கிளப் நிர்வாகிகள் அதன் தலைவர் – முன்னாள் எம்.எல்.ஏ. புரசை ரங்கநாதன், தலைமையில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (23–12–2025) காலை, புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை ”அண்ணா நகர் டவர்ஸ் கிளப் நிர்வாகிகள், அதன் தலைவர் – முன்னாள் எம்.எல்.ஏ. புரசை பி. ரங்கநாதன், அவர்கள் தலைமையில், துணைத் தலைவர் ஆர். சிவகுமார், செயலாளர் ஆர்.முரளிபாபு, இணைச் செயலாளர் டி. மனோஜ்குமார், பொருளாளர் கே.ஜெயச்சந்திரன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் டாக்டர் என்.டி.அவினாஷ், கே.குமார், என்.ஆர். மதுராகவி, கே.மோகன், யூ.நிரஞ்சன், எஸ்.பார்த்தசாரதி, கே. ராஜசேகர், எஸ்.ராஜேசேகர், எம்.எஸ்.ரமேஷ், ஆர்.சதீஷ், என். சி.வெங்கடேசன், கே.யுவராஜ் ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அதுபோது கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் உடனிருந்தார்.




